# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/61 - 2018 ඔක්තෝබර් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.11

*2092/61 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

மேல் மாகாண மாகாண சபையின் மோட்டார் வாகன நியதிச் சட்ட வரைபினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**கெஜிடன் லலித் வனிகரத்ன,**
மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி
மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட
உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும்
கிராம அபிவிருத்தி அமைச்சர்.

மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு,
இல. 204,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஒற்றோபர் 08.

**மேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டம்**

மேல் மாகாணத்தினுள் மோட்டார் வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல், அனுமதிக் கட்டணம் அறவிடல் மற்றும் மேல் மாகாண 1991ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டத்தினை செல்லுபடியற்றதாக்குவதற்கும் மற்றும் ஏற்பாடுகளை வழங்குவதற்குமான நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகிறது.

1. இந்நியதிச் சட்டமானது 2018 ஆம் ஆண்டின் ....... இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச் சட்டம் என அறியப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும். *(குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்.)*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*திணைக்களத்தினை நிறுவுதல்.*

2. இந்நியதிச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக (இதன் பிறகு திணைக்களம் என அறியப்படும்) மேல் மாகாண மோட்டார் வாகன திணைக்களம் இதனால் தாபிக்கப்படும்.

*திணைக்களத்தின் நோக்கம்.*

3. மேல் மாகாணத்திற்குரிய வாகனங்கள் தொடர்பாக சட்டத்தின் மூலம் நிர்ணயிக்க முடியுமான வரையறை உட்பட சில விடுவித்தல்களுக்குட்பட்டு மோட்டார் வாகனங்களுக்கான எந்தவொரு அனுமதிப்பத்திரங்களுக்காகவும் கட்டணங்களை அறவிடல் திணைக்களத்தின் நோக்கமாகும்.

*திணைக்களத் தலைவர்.*

4. (1) திணைக்களத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் இதன் பிறகு "ஆணையாளர்" என அறியப்படும் மேல் மாகாண மோட்டார் வாகன ஆணையாளர், திணைக்களத்தின் தலைவராவார்.

(2) இந்நியதிச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக முன்பு மேற்கொள்ளப்பட்ட மேல் மாகாண மோட்டார் வாகன பிரதி ஆணையாளர், மேல் மாகாண மோட்டார் வாகன உதவி ஆணையாளர், மோட்டார் வாகன பரிசோதகர்கள் மற்றும் தேவைப்படக்கூடிய வேறு பதவிகள் நியமிக்கப்பட முடியும்.

(3) இப்பிரிவின் கீழ் வரும் நியமனங்கள் தொடர்பாக காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட சட்டத்தினால் திருத்தப் பட்ட 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைச் சட்டத்தின் பிரிவுகள் உரித்துடையதாகும்.

(4) ஆணையாளர், அமைச்சு செயலாளரின் பொதுவான தலைமை மற்றும் நிர்வாகத்திற்குட்பட்டு செயற்படல் அவசியம்.

5. இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணையாளரிற்கு அளிக்கப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரமும் ஆணையாளரினால் திணைக்கள அல்லது வேறு ஏதாவதொரு அரச அதிகாரிக்கு கையளிக்க முடியும்.

*ஆணையாளரின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள்.*

6. ஆணையாளரின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிட்டவாறாகும்:-

(1) மேல் மாகாணத்தில் வசிக்கும் யாராவது ஒருவர் வசமுள்ள அல்லது பாவிக்கின்ற மோட்டார் வாகனமொன் றிற்கு சட்டத்தினால் நியமிக்கப்பட்டுள்ள முறைப்படி வருமான வரிப்பத்திரம், வியாபார அனுமதிப்பத்திரம், விருந்தினர்களின் வாகனங்களுக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் அல்லது வேறு ஏதாவது வாகன அனுமதிப்பத்திரத்திற்காக சட்டத்தினால் நியமிக்கப்பட்டுள்ள முறைப்படி நியமிக்கப்பட்டுள்ள அளவில் கட்டணங்களை அறவிடல், அறவிடப்படும் கட்டணங்களுக்கான உரிய அனுமதிப் பத்திரங்களை அது தொடர்பான சட்டப்பிரிவுகளுக்கேற்ப விநியோகித்தல் மற்றும் செலுத்தப்படாத மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களிற்கான கட்டணத்தினை இந்நியதிச்சட்ட முறைகளின்படி அறவிடல்.

(2) மோட்டார் வாகனங்கள் தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு அதிகாரியிடமிருக்கும் அதிகாரங்கள் அச்சட்டத்தில் குறிப்பிட்ட படி உரிய அதிகாரியினால் அளிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வாறு அளிக்கப்பட்டுள்ள அளவிற்கு அது தொடர்பான அதிகாரத்தினை செயற்படுத்தல்;

(3) மேல் 6(1) மற்றும் 6(2) தொடர்பாக செயற்படும் போது தேவையான புதிய தொழில்நுட்பத்தினைப் பாவித்து நிர்வாக நடைமுறைகளை மேற்கொள்ளல் ஆணையாளரின் செயற்பாடாகும்;

(4) மேல் மாகாண வீதிகளில் மோட்டார் வாகனங்களில் பயணிகளைக் கொண்டு செல்லும் சேவை மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மாகாணங்களுக்கிடையே வீதிகளில் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்;

(5) ஆணையாளரின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள், மேலே சட்டம் மற்றும் நடைமுறைகளால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முடிவும், தீர்மானமும், தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாயிருத்தல் அவசியமல்ல;

*அனுமதிப்பத்திரத் திற்காக விண்ணப் பித்தல், அனுமதிப் பத்திர விநியோகம்.*

7. (1) மாகாணத்தில் மோட்டார் வாகனமொன்றிற்கான ஏதாவது அனுமதிப்பத்திரம், தற்காலிக அனுமதிப்பத்திரம் தொடர்பான அனைத்து விண்ணப்பங்களும் அது தொடர்பான எழுத்திலான சட்டத்திற் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக விண்ணப்பித்தல் அவசியம்.

(2) அனுமதிப்பத்திரமொன்றிற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஆணையாளரிடம் அல்லது ஆணையாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரியிடம் நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தல் அவசியம்.

(3) ஆணையாளர் அல்லது அனுதிப்பத்திரம் வழங்கும் அதிகாரியினால் தம்மிடம் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படாதிருப்பின் மற்றும் சட்டத்திலுள்ள அது தொடர்பான ஏற்பாடுகளை விண்ணப்பதாரி சரியான முறையில் பூர்த்தி செய்யாதிருப்பின் எவ்விதமான அனுமதிப்பத்திரமும் வழங்கப்படலாகாது.

(4) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் வரையறைக்குள் சில விடுவித்தல்களுக்குட்பட்டு இடம்பெறல் அவசியம். *அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்துதல்.*

8\. (1) சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைப்படி ஏதாவதொரு மோட்டார் வாகன அனுமதிப் பத்திரமொன்றிற்கு அல்லது தற்காலிக அனுமதிப்பத்திரமொன்றிற்கு உட்பட்ட மேல் மாகாணத்திற்குரிய வாகனமொன்றை நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகாத சந்தர்ப்பத்தில் தம்மிடம் வைத்திருத்தல் அல்லது பாவித்தலாகாது.

(2) இப்பிரிவின் செயற்பாட்டிற்காக மோட்டார் வாகனமொன்றைப் பதிவு செய்யும்போது அதிகாரியாக மோட்டார் வாகன பதிவாளர், மோட்டார் வாகன ஆணையாளர், கம்பஹா, கொழும்பு, களுத்துறை அரச அதிபர்கள் அல்லது மேல் மாகாணத்திற்குரிய வாகனங்களிற்கு கருதப்படும்.

(3) 7 (3) இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் விசேட சந்தர்ப்பங்களில் கட்டணம் அறவிடல் அல்லது அறவிடாதிருத்தல் தொடர்பாக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட திணைக்களக் குழுவினால் தீர்மானிக்க முடியும்.

9\. (1) மேல் மாகாணத்திற்குரிய வாகனம் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் கீழ் பெறப்பட வேண்டிய மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்று அல்லது தற்காலிக அனுமதிப்பத்திரமொன்று தொடர்பாக கட்டணம் செலுத்தப்படாதவிடத்து செலுத்தப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படாமைக்கான மேலதிக கட்டணத்துடன் மொத்தக் கட்டணத்தை செலுத்துவதற்காக வழங்கப்படும் இறுதித் தினம் உள்ளடங்கும் விதமாக ஆணையாளரினால் அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட அறிவித்தல் மூலமாக உரிய வாகன உரிமையாளரிற்கு அல்லது அதனை வைத்திருப்பவரிற்கு எழுத்து மூலம் அறிவித்தல் அவசியம்.

மேல் உப பிரிவின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்வதற்காக வழங்கப்படும் கூடிய கால எல்லை அறிவித்தல் வழங்கப்படும் தினத்திலிருந்து முப்பது நாட்களைவிட மேற்படாத நாளாக இருத்தல் அவசியம்.

(2) இப்பிரிவின் (1)ஆவது பிரிவின் கீழான அறிவித்தல் மூலம் காட்டப்பட்டவாறான கட்டணம், யாராவது அறிவித்தலில் குறிப்பிட்டபடி செலுத்தாதவிடத்து ஆணையாளரினால் அல்லது அதற்கென அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரினால் அந்நபரிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தக் கட்டணம், அந்நபரின் பெயர், மோட்டார் வாகனத்தின் பதிவு உரிமை அல்லது சந்தர்ப்பத் திற்கேற்றவாறு வதிவிடம் அல்லது வியாபார விலாசம் அடங்கிய சான்றிதழ் அச்சான்றிதழில் குறிப்பிட்ட விலாசத்திற்குரிய நீதிமன்ற அதிகார முள்ள மஜிஸ்திரேட் நீதிமன்றிற்கு சமர்ப்பித்தல் அவசியம். அப்போது மஜிஸ்திரேட் காரணங்களைத் தெரிவிப்பதற்கான குறித்த நபரினை தம்முன் அழைத்தல் அவசியம். மேலும், குறித்த நபர் அது தொடர்பாக போதிய காரணங்களைத் தெரிவிக்காவிடின் சான்றிதழில் குறிப்பிட்ட கட்டணம், செலுத்தத் தவறியவரிடமிருந்து தண்டனையாக நிர்ணயிக்கப்படும் தண்டப் பணமாக அறவிடப்படல் அவசியம் என்பதுடன் அத்தண்டப்பணம் மாகாண சபை நிதியத்தில் வரவு வைக்கப்படல் அவசியம்.

10\. (1) இந்நியதிச் சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் கூறப்பட்ட ஏற்பாடுகளை செயற்படுத்தல் தொடர்பான நடைமுறைகளை நிர்ணயித்தல் உட்பட்ட இந்நியதிச் சட்டத்தின் கீழ் திணைக்களத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அமைச்சரினால் விதிகளை உருவாக்க முடியும். *விதிகளைத் தயாரிப்பதற்குரிய அதிகாரம்.*

(2) அமைச்சரினால் உருவாக்கப்படும் அனைத்து விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவ்வாறு வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அதன் பின்னரான தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படல் அவசியம்.

(3) அமைச்சரினால் உருவாக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் இயலுமான வரை விரைவாக அங்கீகாரத்திற்காக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படல் அவசியம். மாகாண சபை அவ்விதியினை அங்கீகரித்து அதன் அங்கீகாரம் தொடர்பாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் அவசியம்.

அவ்வாறு அங்கீகரிக்கப்படாவிடின் அது தொடர்பாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் அவசியம் என்பதுடன் அத்தினத்திலிருந்து அவ்விதியின் கீழ் அதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பற்ற வகையில் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

இடைக்கால ஏற்பாடுகள்.

11. (1) இந்நியதிச் சட்டத்திற்கு மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த தினத்திலிருந்து மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச்சட்டம் இதனால் செல்லுபடியற்றதாக்கப்படும்.

(2) அவ்வாறெனினும், 1991 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மேல் மாகாண மோட்டார் வாகன திணைக் களத்திடமிருந்து,

(அ) அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள்

(ஆ) அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

(இ) அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

இந்நியதிச்சட்டத்தின் கீழ் திணைக்களத்திடமிருந்த அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகக் கருதப்படல் அவசியம்.

(3) 1991ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விடயங்களாகக் கருதப்படல் அவசியம்.

(4) 1991ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன நியதிச்சட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் அல்லது திணைக்களத்திற்கு எதிராக தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் நியதிச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளாகக் கருதப்படல் அவசியம்.

பொருள் கொள்ளல்.

12. பதங்கள் தொடர்பாக வேறு பொருள்கொள்ளல் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச்சட்டத்தில், -

"ஆளுநர்" என்பது, மேல் மாகாண ஆளுநர் எனவும்,

"அமைச்சர்" என்பது, மேல் மாகாண மோட்டார் வாகன விடயப் பொறுப்பு அமைச்சர் எனவும்,

"அமைச்சின் செயலாளர்" என்பது, மேல் மாகாண மோட்டார் வாகன விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் எனவும் கருதப்படும்.

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருள் எனவும் கருதப்படும்.

"சட்டம்" என்பது காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1951ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கம் கொண்ட மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அச்சட்டத்தில் அல்லது அது தொடர்பான விடயங்களிற்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் எந்தவொரு சட்டம் எனவும் கருதப்படும்.

ஏதேனும் முரண்பாடு ஏற்படுமானால் சிங்கள உரை மேலோங்குதல்.

13. இந்நியதிச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின், சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

10 - 1408

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.